# மார்ச் - 06 - செவ்வாய்

## தூய கொலேத்தே

## ஆண்டவரே, உம் பாதைகளை நான் அறியச்செய்தருளும்: திபா. 25:4

**முதல் வாசகம் : தானியேல் (இ) 1 : 2, 11 – 19**

அப்பொழுது அசரியா நெருப்பின் நடுவில் எழுந்து நின்று, உரத்த குரலில் பின்வருமாறு மன்றாடினார் உமது பெயரை முன்னிட்டு எங்களை என்றும் கைவிட்டுவிடாதீர் உமது உடன்படிக்கையை முறித்துவிடாதீர். உம் அன்பர் ஆபிரகாமை முன்னிட்டும், உம் ஊழியர் ஈசாக்கை முன்னிட்டும் உம் தூயவர் இஸ்ரயேலை முன்னிட்டும், உம் இரக்கம் எங்களைவிட்டு நீங்கச் செய்யாதீர். விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் அவர்களின் வழிமரபினரைப் பெருகச்செய்வதாக நீர் அவர்களுக்கு உறுதி அளித்தீர். ஆண்டவரே, எங்கள் பாவங்களால் மற்ற மக்களினங்களைவிட நாங்கள் எண்ணிக்கையில் குறைந்து விட்டோம் உலகெங்கும் இன்று தாழ்வடைந்தோம். இப்பொழுது எங்களுக்கு மன்னர் இல்லை, இறைவாக்கினர் இல்லை, தலைவர் இல்லை எரிபலி இல்லை, எந்தப் பலியும் இல்லை காணிக்கைப்பொருளோ தூபமோ இல்லை உம் திருமுன் பலியிட்டு, உம் இரக்கத்தைப் பெற இடமே இல்லை. ஆயினும், செம்மறிக்கடாக்கள், காளைகளால் அமைந்த எரிபலி போலும் பல்லாயிரம் கொழுத்த ஆட்டுக்குட்டிகளாலான பலிபோலும் நொறுங்கிய உள்ளமும் தாழ்வுற்ற மனமும் கொண்ட நாங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவோமாக. அவ்வாறே எமது பலி இன்று உம் திருமுன் அமைவதாக் நாங்கள் முழுமையாக உம்மைப் பின்பற்றுவோமாக் ஏனெனில் உம்மில் நம்பிக்கை வைப்போர் வெட்கத்திற்கு ஆட்படமாட்டார். இப்பொழுது நாங்கள் முழு உள்ளத்துடன் உம்மைப் பின்பற்றுகிறோம் உமக்கு அஞ்சி, உம் முகத்தை நாடுகிறோம். எம்மை வெட்கத்துக்கு உள்ளாக்காதீர் மாறாக, உம் பரிவிற்கு ஏற்பவும், இரக்கப் பெருக்கிற்கு ஏற்பவும் எங்களை நடத்தும்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது இரக்கத்தையும் பேரன்பையும் நினைத்தருளும்

**நற்செய்தி : மத்தேயு 18 : 21 – 35**

அக்காலத்தில் பேதுரு இயேசுவை அணுகி, ”ஆண்டவரே, என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்துவந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழு முறை மட்டுமா? எனக் கேட்டார். அதற்கு இயேசு அவரிடம் கூறியது ”ஏழுமுறை மட்டுமல்ல் எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன். விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம் ஓர் அரசர் தம் பணியாளர்களிடம் கணக்குக் கேட்க விரும்பினார். அவர் கணக்குப் பார்க்கத் தொடங்கியபொழுது, அவரிடம் பத்தாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனைக் கொண்டு வந்தனர். அவன் பணத்தைத் திருப்பிக் கொடுக்க இயலாத நிலையில் இருந்தான். தலைவரோ, அவனையும் அவன் மனைவி மக்களோடு அவனுக்குரிய உடைமைகள் யாவற்றையும் விற்றுப் பணத்தைத் திருப்பி அடைக்க ஆணையிட்டார். உடனே அப்பணியாள் அவர் காலில் விழுந்து பணிந்து, ”என்னைப் பொறுத்தருள்க் எல்லாவற்றையும் உமக்குத் திருப்பித் தந்துவிடுகிறேன்” என்றான். அப்பணியாளின் தலைவர் பரிவு கொண்டு அவனை விடுவித்து அவனது கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார். ஆனால் அப்பணியாள் வெளியே சென்றதும், தன்னிடம் நூறு தெனாரியம் கடன்பட்டிருந்த உடன் பணியாளர் ஒருவரைக் கண்டு, ”நீ பட்ட கடனைத் திருப்பித்தா” எனக்கூறி அவரைப் பிடித்துக் கழுத்தை நெரித்தான். உடனே அவனுடைய உடன் பணியாளர் காலில் விழுந்து, என்னைப் பொறுத்தருள்க் நான் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்” என்று அவனைக் கெஞ்சிக் கேட்டார். ஆனால் அவன் அதற்கு இசையாது, கடனைத் திருப்பி அடைக்கும்வரை அவரைச் சிறையிலடைத்தான். அவருடைய உடன் பணியாளர்கள் நடந்ததைக் கண்டபோது மிகவும் வருந்தித் தலைவரிடம் போய் நடந்தவற்றையெல்லாம் விளக்கிக் கூறினார்கள். அப்போது தலைவர் அவனை வரவழைத்து, ”பொல்லாதவனே, நீ என்னை வேண்டிக் கொண்டதால் அந்தக்கடன் முழுவதையும் உனக்குத் தள்ளுபடி செய்தேன். நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் உன் உடன்பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா? என்று கேட்டார். அத்தலைவர் சினங் கொண்டவராய், அனைத்துக் கடனையும் அவன் அடைக்கும்வரை அவனை வதைப்போரிடம் ஒப்படைத்தார். உங்களுள் ஒவ்வொரு வரும் தம் சகோதரர் சகோதரிகளை மனமார மன்னிக்கா விட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்“ என்றார்.

**தியானம்:** அன்பான தந்தை இறைவன் எப்பொழுதும் எம்மை மாறாத அன்புடன், பாசத்துடன் ,இரக்கத்துடன் மன்னித்து வழிநடத்தி வருகின்றார். சிலுவையில் அறைந்த போது கூட இரக்கத்தின் தேவன் இவர்கள் அறியாமல் செய்கின்றார்கள் தந்தையே இவர்களை மன்னியும் என்று தான் இறை வேண்டல் செய்கின்றார். கிறிஸ்தவர்களாகிய எம்மிடமும் இந்த தெய்வீக அன்பு, பண்பு, இரக்கத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறார். ஆனால் நாம் என்ன செய்கின்றோம் ? ஒருவர் எமக்கு புரிந்த குற்றத்தை எம்மால் மன்னிக்கவே முடியாமல் பல விதமான பாவ செயல்பாடுகளை செய்து கொண்டே போகின்றோம். இதனால் எமது மனம் வேதனைப்பட்டு , அமைதியற்ற சமாதானமற்ற நிலையில் இருந்து கொண்டே இருக்கும். எப்பொழுதும் நாம் மன்னிக்க அழைக்கப்படுகின்றோம். ஆனால் இது இலகுவான காரியமல்ல. மனிதனால் இதுமுடியாது .கடவுள் அருள் , தெய்வீக தன்மையால் முடியும் என்று இறை மகனாகிய இயேசு வாழ்ந்து காட்டியிருக்கிறார். மத்:5:14 இல் என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி உங்களைப்பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும போது நீங்கள் பேறு பெற்றவர்களே! என்ற இறை வார்த்தையூடாகவும் மனதை அமைதிப்படுத்தி, மன்னிக்க முடியாதவர்களை மனதால் மன்னித்து அவர்களுக்காக மன்றாடும் போது. நாங்கள் இறைவனின் இரக்கம் பெற்றவர்களாக வாழ அருள் பெறுகின்றோம்.